இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 328 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 24 – திங்கள்கிழமை 08 ஜூலை 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 328 : Thiruvalluvar Year - 2055 - Aani 24 - Monday 08 July 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற

# 146 பழங்குடியின இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.7.2024) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், Nettur Technical Training Foundation (NTTF) நிறுவனத்தின் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து, பன்னாட்டு மற்றும் இந்திய முன்னணி நிறுவனங்களால் நேர்முக தேர்வுகள் நடத்தப்பட்டு, பல்வேறு பணிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 146 பழங்குடியின இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், வளர்ச்சித் துறை ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி. க.லட்சுமி பிரியா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இன்னசென்ட் திவ்யா, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 8-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.7.2024) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், Nettur Technical Training Foundation (NTTF) நிறுவனத்தின் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து, பன்னாட்டு மற்றும் இந்திய முன்னணி நிறுவனங்களால் நேர்முக தேர்வுகள் நடத்தப்பட்டு, பல்வேறு பணிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 146 பழங்குடியின இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை கட்டுதல், அம்மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கல்வி உதவித்தொகைகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குதல், சுயதொழில் / வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைந்திட நடவடிக்கை!**

அந்த வகையில், விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள கள்ளக்குறிச்சி, தருமபுரி, சேலம், திருவண்ணாமலை, நாமக்கல், திருச்சி மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பட்டப்படிப்பு, பொறியியல், தொழிற்நுட்பக்கல்வி, ஐ.டி.ஐ. படித்து வேலையில்லாமல் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி, அவர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில் வாழ தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் திட்டம் வகுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், மலைப்பகுதிகளில் இயங்கிவரும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், துறைச் சார்ந்த மாவட்ட திட்ட அலுவலர்/மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களின் ஒத்துழைப்புடன் மலைப்பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று, தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, பழங்குடியின வேலையில்லா பட்டதாரி இளைஞர்கள் 450 நபர்களை திரட்டி திருச்சி, சேலம் மற்றும் சென்னை மாவட்டங்களில் வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தின் முடிவில் தகுதி வாய்ந்த 200 பழங்குடியின இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

13.02.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் தேர்வு செய்யப்பட்ட 200 பழங்குடியின இளைஞர்களுக்கு பயிற்சிக்கான ஆணைகள் வழங்கப்பட்டன.

பயிற்சி ஆணைகள் பெற்ற 200 பழங்குடியின இளைஞர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பயிற்சி கழகத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட கர்நாடகா மாநிலம், பெங்களூரில் உள்ள NTTF (Nettur Technical Training Foundation) என்ற பயிற்சி நிறுவனத்தின் மூலம் மூன்று மாதக்காலம் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின் போது அந்த இளைஞர்களுக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகள் அனைத்தும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் வழங்கப்பட்டது.

**கல்வித்திறன் அடிப்படையில் பணி!**

திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற இளைஞர்களில், 146 இளைஞர்களுக்கு பன்னாட்டு நிறுவனமான ZF Rane Automotive India Private Limited மற்றும் தமிழ்நாட்டிலுள்ள தலைச்சிறந்த இந்திய நிறுவனங்களான Shanthi Gears Limited, HDB Financial Service, Tube Investment of India (TI), KUN Capital Motors Private Limited போன்ற நிறுவனங்களின் மூலம் நேர்முக தேர்வுகள் நடத்தப்பட்டு அவர்களின் கல்வித்திறன் மற்றும் தனிப்பட்ட திறமைகளின் அடிப்படையில் Computerised Numerical Control (CNC) பிரிவில் 67 இளைஞர்களும், Customer Relationship Management (CRM) பிரிவில் 79 இளைஞர்களும் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான பணிநியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார். பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்ட 146 இளைஞர்களில், 106 ஆண்கள் மற்றும் 40 பெண்கள் ஆவர்.

இந்த நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், வளர்ச்சித் துறை ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமி பிரியா, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் இன்னசென்ட் திவ்யா, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் செயலாளர் ஆர். உமாமகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## “அக்னிவீர்” திட்டம் தொடங்கி

# ஓராண்டுக்குள் 20 வீரர்கள் உயிரிழப்பு!

### 2 பேர் தற்கொலை!

புதுடெல்லி, ஜூலை 8 -

‘அக்னிவீர்’ திட்டம் தொடங்கி ஓராண்டு முடிவதற்குள் 20 வீரர்கள் உயிரிழந்திருப்பது தெரிய வந்துள்ளது.

இதில், 2 வீரர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடும் விமர்சனங்களை புறக்கணித்து அக்னிவீர் திட்டத்தின் மூலம் ராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் திட்டத்தை, கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடங்கியது. அதன் மூலம் ராணுவத்தில் சேர்ந்த 20 பேர் உயிரிழந்துள்ளது தெரியவந்துள்ளது.

ராணுவத்தில் சேர்ந்த 18 பேர் பணியின் போதும், உடல் நலகுறைவாலும் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இதனிடையே, ஸ்ரீகாந்த் குமார் என்கிற 22 வயது விமானப் படை அக்னிவீரர், 4 நாட்களுக்கு முன்னதாக தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஆக்ராவில் உள்ள விமானப்படை தளத்தில் இவர் தற்கொலை செய்து கொண்டது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்தாண்டு அக்டோபர் மாதம் ஜம்மு ராணுவ பிரிவில் பணியாற்றி வந்த அக்னி வீரர் ஒருவரும், இதே போன்று தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அக்னிவீர் திட்டத்தில் சேருவோருக்கு உரிய ஓய்வூதியம் இல்லை. உயிரிழந்தாலும் ஜவான் என்றழைக்கப்படும் ராணுவ வீரர்களுக்கு கிடைக்கும் சலுகைகளை விட அக்னிவீர் திட்டத்தில் சேருவோருக்கு, குறைவான இழப்பீடுகள் தான் வழங்கப்படுகிறது.

ராணுவ கேண்டீன் வசதிகளை பயன்படுத்த முடியாது என்கிற புகார்களும் தற்போது எழுந்துள்ளது.

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அக்னி வீரர்கள் நிலை குறித்து குறிப்பிட்டு பேசினார்.

அதன்பிறகு அக்னிவீர் திட்டம் குறித்த விவாதங்கள் மீண்டும் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: இன்று

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூறாவளி பிரச்சாரம்!



சென்னை, ஜூலை 8-

விக்கிரவாண்டி தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு ஆதரவாக இன்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்.

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவாவுக்கு ஆதரவாக அமைச்சர்கள், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார்.

இன்று 2ஆம் நாளாக (8ஆம் தேதி) தும்பூர், நேமூர், ராதாபுரம், விக்கிரவாண்டி பேரூராட்சி.

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இறுதி கட்ட தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

சேலம், ஜூன் 8-

கபினி அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 84 அடியாகும். நேற்று அணையின் நீர்மட்டம் 81.12 அடியாக உயர்ந்து காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 5,039 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இந்த அணையில் இருந்து 3,250 கன அடி நீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் ஒகேனக்கல்லுக்கு நேற்று காலை நீர்வரத்து 3000 கன அடியாக அதிகரித்துள்ளது. ஒகேனக்கல்லில் உள்ள மெயின் அருவி, ஐந்தருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.